1971 டிசம்பர் 15]

அனுப்பியிருக்கிறார். தென் மாவட்டங்களில் புகுமுக வகுப்பிலே படித்த பிறகு பட்டப் படிப்பையும் தமிழில் பயிற்றுவிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE: Sir, is it a fact that in several colleges where this incentive scheme has been implemented all colleges in Tamil Nadu—the boys have not received this amount? For instance, in the Pachayappa's College, Kancheepuram the Minister himself has told me that the amount has not been received by the boys. Is it a fact that many students have not received this incentive and if it is so, may I know whether the Government will exercise some control and see why this delay has taken place and whether they will make good this delay?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்லூரி நிர்வாகத்தினருக்குச் சில ஐயப்பாடுகள் ஏற்பட்டதன் காரணமாக இந்தத் தொகையைக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த நேரத்தில் மாணவர்களுக்கு அத் தொகை போய்ச் சேர்ந்திருக்கும். உதவித் தொகை கொடுக்கப்படாத நிலைமை எங்கேயாவது இருந்தால் அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, சிலபல கல்லூரிகளில் மாணவர்கள் தமிழில் பயிற்சி பெற விண்ணப்பித்திருந்தும், அதிக மதிப்பெண் பெற்றிருந்த காரணத்தால் கல்லூரி முதல்வர்கள் அந்த மாணவர்களை ஆங்கிலத்தில் பயிலுமாறு சொல்லப்பட்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே. அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

குலசேகரன் கோட்டையில் பழங்காலச் சிற்பங்கள்

*401 **வினா.—திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், T வாடிப்பட்டியை அடுத்துள்ள குலசேகரன்கோட்டை கிராமத்தில் பழங்காலச் சிற்பங்களும், சிலைகளும் புதையுண்டு கிடப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள குலசேகரன் கோட்டை என்ற இடத்தில் பண்டையக்காலச் சிறப்பு மிக்க ஒரு கோட்டை புதையுண்டு இருப்பதாக அந்த வட்டாரத்து மக்கள் கூறுகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சித் துறை மூலமாக இதை ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுவரையில் அதுபற்றிய குறிப்புகள் அரசாங்கத்திற்கோ, புதைபொருள் ஆராய்ச்சித் துறைக்கோ வரவில்லை. புதைப்பொருள் ஆராய்ச்சித்துறையினர் முறைப்படி பல்வேறு இடங்களை ஆராய்ந்து வருகிறார்கள். இதற்கு முக்கியத்துவம் தருகிறார்களா என்பது ஆராய்ச்சித் துறையினரைச் சார்ந்த விஷயம். அவர்களுடைய கவனத்திற்கு வேண்டுமானால் அரசாங்கம் இதைக் கொண்டு வரலாம்.

கல்வராயன்மலையிலுள்ள பள்ளி

***402 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன்மலையில் இருந்த ஓராசிரியர் பள்ளி 1967-க்கு முன்பே மூடப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை மீண்டும் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்வராயன்மலையில் பள்ளியில் சேரவேண்டிய பிள்ளைகள் போதுமான அளவு இருந்து, புதிய பள்ளிகள் திறக்கத் தேவையான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடமிருந்து பள்ளிக்கல்வி இயக்குநருக்கோ அல்லது அரசுக்கோ வந்தால் அவை பரிசீலிக்கப்படும்.

மாவட்ட வளர்ச்சி மன்றத் தலைவர்

***403 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சிக் குழுவின் தலைவராக இருப்பதன் காரணமாக, கூட்டங்களிலே ஏதாவது விளக்கம் கேட்டால் சிறு விளக்கம்தான் கொடுக்கப்படுகிறதே தவிர செய்ய வேண்டிய வேலைகளைப் பரிசீலனை